**செப்டம்பர் – 25**

# TNPSC துளிகள்

- வாட்ஸப் நிறுவனமானது போலி செய்திகள் உட்பட, புகார்கள் மற்றும் குறைகளை தெரிவிக்க கோமல் லஹிரி என்பவரை இந்தியாவிற்கான 'குறைதீர்ப்பு அலுவலராக' நியமித்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் CMCHIS மற்றும் PMJAY-இன் ஒருங்கிணைந்த பதிப்பு துவக்கம்

- மத்திய அரசின் சிறப்பு வாய்ந்த சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டுத் திட்டத்துடன் இணைத்து ஒரு ஒருங்கிணைந்த முன்முயற்சி திட்டமாக தமிழ்நாடு அரசானது (செப்டம்பர் 23) தொடங்கியுள்ளது.
- இந்த CMCHIS (Chief Minister's Comprehensive Health Insurance Scheme) ஆனது மறைந்த முதல்வர் ஜெ. ஜெயலலிதாவால் 2012-இல் தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- இத்திட்டமானது ஏழைகளுக்கும் சமுதாயத்தின் கீழ்நிலையில் உள்ளவர்களுக்கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை வசதியுடைய மருத்துவமனைகளில் பணமில்லா சிகிச்சையளிப்பதற்காக முழுவதும் மாநில அரசால் நிதியளிக்கப்படும் திட்டமாகும்.


## மாநிலத்தின் புதிய மாநகராட்சிகள்

- கன்னியாகுமரி மாவட்டத்தின் நாகர்கோவில் நகராட்சியானது மாநிலத்தின் 13வது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுமென்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- இது மாநிலம் முழுவதும் வார்டுகளின் எல்லைப்பகுதிகள் குறிக்கப்பட்ட பிறகு தரம் உயர்த்தப்படும்.
- முதல்வர் மேலும் கிள்ளியூர் மற்றும் திருவட்டாறு ஆகிய தாலுகாக்கள் உருவாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
- தமிழ்நாட்டில் தற்போது, கடைசியாக 2014-ல் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட திண்டுக்கல் உடன் சேர்த்து மொத்தம் 12 மாநகராட்சிகள் உள்ளன.

# தேசியச் செய்திகள்

## பிரதம மந்திரியின் ஜன் ஆரோக்கியா திட்டம்

- ஆயுஷ்மான் பாரத்தின் கீழ் சிறப்பு வாய்ந்த பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டத்தை (Pradhan Mantri Jan Aarogya Yojana - PMJAY) ஜார்க்கண்டின் ராஞ்சியில் பிரதமர் (செப்டம்பர் 23) துவக்கி வைத்தார்.
- இந்த திட்டமானது 10.74 கோடி குடும்பங்களுக்கு அதாவது 50 கோடிக்கும் மேற்பட்ட பயனாளர்களுக்கு ரூ.5 லட்சம் வருடாந்திர உடல்நல காப்பீட்டை வழங்குகிறது.




- தெலுங்கானா, ஒடிசா, கேரளா, பஞ்சாப் மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் இந்த திட்டத்தில் சேர்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- இது 2011-ல் எடுக்கப்பட்ட சமூக-பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பில் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் குடும்பங்களை உள்ளடக்கியதாகும்.
- PMJAY திட்டமானது 60% மத்திய அரசாலும் மீதத்தொகை அந்தந்த மாநில அரசுகளாலும் நிதியளிக்கப்படும்.

## தேசிய இ-விதான் செயலிக்கான தேசிய நெறிபடுத்தும் பயிற்சிப் பட்டறை

- இரண்டு நாள் தேசிய அளவிலான தேசிய இ-விதான் செயலி (National e-Vidhan Application-NeVA) நெறிபடுத்தும் பயிற்சிப் பட்டறையை நாடாளுமன்ற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் துவக்கி வைத்தார்.
- தேசிய இ-விதான் ஆனது சட்டசபையின் அன்றாட செயல்பாடுகள் பற்றிய தகவல்களை நிகழ்நேரத்தில் வழங்கக்கூடிய டிஜிட்டல் செயலியாகும்.
- இது சட்டமன்றங்களின் அனைத்து அவைகளையும் டிஜிட்டல் தளத்தில் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட ரூ. 739 கோடி ரூபாய் மதிப்புடைய திட்டமாகும்.
- இது சட்டமன்றத்தாலும் அனைத்து அரசுத் துறைகளாலும் பயன்படுத்தப்படும்.

### *இ-விதான்*

- இ-விதான் என்பது குறிக்கோள் சார்ந்த திட்டமாகும். இது மாநிலங்களின் சட்டமன்றங்களை காகிதமற்ற டிஜிட்டல் முறையில் செயல்படும் விதத்தில் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் பகுதியான இது பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சகத்தை அதிகாரப்பூர்வ செயலாண்மையாகக் கொண்டது.
- இந்த அமைச்சகமானது 'ஒரு நாடு ஒரு செயலி' என்ற கோட்பாட்டின் அடிப்படையில், ஒரே தளத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகள் உட்பட அனைத்து 40 அவைகளையும் கொண்டு வரக்கூடிய NeVA என்ற திட்டத்தை இ-விதானாக அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச நிலையங்கள் கழகத்தின் உலக விமானப் போக்குவரத்து அறிக்கை

- சர்வதேச விமான நிலையங்கள் கழகத்தின் உலக விமானப் போக்குவரத்து அறிக்கையின்படி டெல்லியின் இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையமானது உலகின் 16-வது பரபரப்பான விமான நிலையமாக இடம் பிடித்துள்ளது.
- இந்த விமான நிலையமானது 2017-ல் 6.34 கோடி பயணிகளை கையாண்டுள்ளது.
- இது 2016 ஆம் ஆண்டில் 22வது இடத்தில் இருந்தது மற்றும் 2017-ல் 14% அதிக பயணிகளை கையாண்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் அட்லாண்டா ஹார்ட்ஸ்ஃபீல்ட் - ஜாக்சன் விமான நிலையம் 10.39 கோடி பயணிகளை கையாண்டு உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையத்தின் இடத்தைப் பிடித்துள்ளது. இதனைத் தொடர்ந்து 9.38 கோடி பயணிகளுடன் பீஜிங் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- துபாய் சர்வதேச விமான நிலையமானது 8.82 கோடி பயணிகளைக்

கையாண்டு மூன்றாம் இடத்தில் உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆஸ்காரில் அதிகாரப்பூர்வ நுழைவு - நார்வே

- வெளிநாட்டு மொழி திரைப்படப் பிரிவில் ஆஸ்காருக்கு அனுப்பப்படும் திரைப்படமாக "What will People Say" என்ற படத்தை அதிகாரப்பூர்வ நுழைவுப் படமாக நார்வே தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்த படத்தில் அசாமின் கோயல்பாரா மாவட்டத்தைச் சேர்ந்த பாலிவுட் நடிகர் அடில் ஹீஸைன் நடித்துள்ளார்.
- இதற்கு முன்னர் இதே பிரிவில் இந்தியாவின் அதிகாரப்பூர்வ நுழைவுக்கு மொத்தமுள்ள 29 படங்களிலிருந்து "Village Rockstars" திரைப்படமானது 12 பேர் கொண்ட இந்தியத் திரைப்படக் கூட்டமைப்பால் (Film Federation of India-FII) தேர்ந்தெடுக்கப்பட்டது.

## நாடு தழுவிய போலியோ எதிர்ப்பு தடுப்பூசி - பாகிஸ்தான்

- 5 வயதிற்கும் குறைவான குழந்தைகளுக்கு நாடு தழுவிய போலியோ எதிர்ப்பு தடுப்பூசி செயல்பாட்டை பாகிஸ்தான் தொடங்கியுள்ளது.
- இந்த செயல்பாடானது 2018 - 19 ஆம் ஆண்டின் குறைந்த பரிமாற்ற காலத்தில் தேசிய அளவிலான நாடு தழுவிய வீட்டுக்கு வீடான முதலாவது பிரச்சாரமாகும்.
- உலகின் போலியோவால் பாதிக்கப்படும் பகுதிகளையுடைய 3 நாடுகளில் ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜீரியாவுடன் இணைந்து பாகிஸ்தானும் ஒன்றாகும்.
- உலக சுகாதார அமைப்பின் திட்ட அளவுப்படி, நாடு முழுவதும் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு எந்தவொரு போலியோ பாதிப்புகளும் பதிவு செய்யப்படவில்லையெனில் அந்நாடு போலியோ அற்ற நாடாக கருதப்படும்.


## வெஸ்ட் பேங்க் கிராமம் - இடிபாடு காலக்கெடு

- பாலஸ்தீனியர்கள் வசித்துவரும் 'வெஸ்ட் பேங்க்' கிராமத்தை இடிக்கப் போவதாகவும் அக்டோபர் 1-ம் தேதியை கிராமத்தை விட்டு வெளியேறுவதற்கான கெடுவாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.
- இதற்கு முன்பு இஸ்ரேலானது 'சட்டவிரோதமாக கட்டப்பட்ட' கிராமத்தில் வசிப்பவர்களுக்கு மீள்குடியேற்றத்தை வழங்கியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## பிரித்வி இடைமறிப்பு ஏவுகணை சோதனை

- ஒடிசாவின் கடற்கரைப் பகுதியில் இந்தியா தனது இடைமறிப்பு ஏவுகணை சோதனையை இரவில் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இதன் மூலம் DRDO ஆனது இரண்டு அடுக்கு கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை உள்நாட்டிலேயே உருவாக்குவதில் புதிய மைல் கல்லை அடைந்துள்ளது.





- இது இரண்டு நிலையுடைய ஏவுகணையாகும் மற்றும் இரண்டு அடுக்குகளும் திட உந்து எரிபொருளால் இயங்குவதாகும்.
- இது பூமியின் வளிமண்டலத்தின் 50 கி.மீ உயரத்தில் வெளிப்புற வளிமண்டல பகுதியில் உள்ள இலக்குகளுக்கு பயன்படுத்துவதற்காக வடிமைக்கப்பட்டுள்ளது.
- இது ஏற்கனவே உபயோகத்திலிருந்தும் பிரித்வி வான் பாதுகாப்பு (Prithvi Air Defence-PAD)/மேம்பட்ட வான் பாதுகாப்பு (Advanced Air Defence-AAD) கூட்டிணைவிலுள்ள பிரித்வியை மாற்றுவதை நோக்கமாக உடையது.

## மிகச்சிறிய மனித உணவுக்குழல் உருவாக்கம்

- முதன்முறையாக விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உணவுக்குழாய்க்குரிய உயிர் உறுப்பை வளர்த்துள்ளனர். மிகச்சிறிய அளவுடைய இதை மனிதனின் உணவுக்குழாயின் செயல்பாட்டுத்திறனுடைய பல்திறன்

கொண்ட ஸ்டெம் செல்லைக் கொண்ட ஆய்வகத்தில் உருவாக்கியுள்ளனர்.

- இந்த உயிர்ப்பொறியியல் சார்ந்த உயிர்வகை உறுப்புகளானது குடல் சீர்கேடுகளுக்கு எதிரான மருந்துகள் குறித்த ஆய்வு மற்றும் சோதனைக்கு புதிய வழிகளை வகுக்கிறது.




- மேலும், உயிரிமயமாக்கப்பட்ட மரபு ரீதியாக பொருந்திய உணவுக்குழாய்க்குரிய திசுவானது தனிப்பட்ட நோயாளிகளுக்கும் இடமாற்றம் செய்ய உதவும்.
- இது பிறப்பிலேயே ஏற்படும் குறைபாடுகளான உணவுக்குழாய் துவாரமின்மை, உறுப்பு செயலிழப்பு, உணவுக்குழல் அழற்சி, பாரட்டின் அணு உருமாற்ற கோளாறு போன்றவற்றைக் குறித்து ஆய்வு செய்யவும் உதவுகிறது.

# மாநிலச் செய்திகள்

## அரசு மின்னணு-சந்தை - அருணாச்சலப் பிரதேசம்

- அருணாச்சலப் பிரதேச முதல்வர் பேமா காந்து, 26000 அரசு நிறுவனங்களுடன் கூடிய அரசு மின்னணு சந்தையை இட்டா நகரில் தொடங்கி வைத்தார்.
- இது அரசாங்கத்தின் கொள்முதல்களில் அதிக வெளிப்படைத்தன்மையை கொண்டு வருதலையும் காகிதமற்ற மற்றும் பணமில்லாப் பரிவர்த்தனைகளை அடைவதையும் நோக்கமாகக் கொண்டது.
- இதனால், ஆந்திரப்பிரதேசம், அசாம், குஜராத், தெலுங்கானா மற்றும் புதுச்சேரியை அடுத்து GeM (Government electronic Marketplace) உடன் புரிந்துணர்வு

ஒப்பந்தம் கையொப்பமிட்ட. 6-வது மாநிலமாக அருணாச்சலப் பிரதேசம் ஆகியுள்ளது.

# இதர செய்திகள்

## நேபாள சுற்றுலாவிற்கான நல்லெண்ண தூதர்

- முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் பாலிவுட் நடிகையான ஜெயப்பிரதா நேபாள சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்த நியமனமானது 4 ஆண்டு காலத்திற்கானதாகும்.
- நேபாள அரசானது 2020 ஆம் ஆண்டை ‘நேபாள சுற்றுலாக் கால வருடம்’ என அனுசரிப்பதையும் இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -